DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா. 24

Prosecution witness

(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு. கைலாசம் கனகராஜன் | Caste: | |
| Father's Name: | கைலாசம் | Calling: | Alternate Nodal Officer,<br>Tamil Nadu LSA Reliance Jio |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 44 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 28.11.2025.

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது Reliance Jio infocomm நிறுவனத்தில் Alternate Nodal Officer ஆக 18.03.2021 முதல் பணிபுரிந்து வருகிறேன். இராமநாதபுரம் மாவட்டம் கமுதி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் திரு. இளஞ்செழியன் கடந்த 19.09.2025 அன்று e mail வழியாக கமுதி காவல் நிலைய கு.எண். 37/2024 வழக்கில் கைப்பற்றப்பட்ட 8667856574 என்ற மொபைல் எண்ணிலிருந்து 28.01.2024-04.02.2024 வரை உள்ள CDR மற்றும் Customer Application Form ஆகிய விவரங்களை கேட்டு விண்ணப்பித்தார். அந்த விண்ணப்பத்தின் பேரில் என் நிறுவனத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட கணிணியிலிருந்து காவல்துணைக் கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்ட விவரங்களை பதிவிறக்கம் செய்து நான் கைப்யொப்பமிட்டு 64(4)(C) Bharatiya Sakshya Adhiniyam 2023 Act ன்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.11.28 12:57:29 +0530

படி என்னுடைய கையொப்பமிட்டு காவல் துணைக் கண்காணிப்பாளர் இளஞ்செழியனுக்கு கொரியர் மூலம் அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த ஆவணம்தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஆவணம் **அ.சா.ஆ.35**. மேற்படி மொபைல் எண் அலெக்ஸ் பாண்டியன் த/பெ. வெற்றிவேல், 09/57A கிழக்கு தெரு, அம்மன்பட்டி, வேலான் ஊரணி, இழுப்பையூர், விருதுநகர் மாவட்டம். மேற்படி எண் கொண்ட சிம் 11.12.2023 ம் தேதி 4/330 MGR காலனி, இழுப்பையூர், கமுதி நெல்லிக்குளம், விருதுநகர் மாவட்டம் என்ற விலாசத்தில் உள்ள POS ல் வாங்கப்பட்டுள்ளது. 29.01.2024 ம் தேதி காலை 9.41 லிருந்து மதியம் 12.05 வரை மேற்சொன்ன எண்ணிலிருந்து வேறு எந்தெந்த மொபைல் எண்ணிற்கு அழைப்புகள் சென்றுள்ளது, வந்துள்ளது என்றால் 8489104887 என்ற எண்ணிலிருந்து 8667856574 என்ற எண்ணிற்கு 29.01.2024 ம் தேதி காலை 9.41.50 மணிக்கு அழைப்பு வந்துள்ளது. அந்த அழைப்பின் கால அளவு 11 வினாடி. 8667856574 என்ற எண்ணிலிருந்து 8122845864 என்ற எண்ணிற்கு 29.01.2024 ம் தேதி காலை 9.45.02 மணியளவில் அழைப்பு சென்றுள்ளது. அந்த அழைப்பின் கால அளவு 21 வினாடி. நான் கொடுத்த CDR அறிக்கையில் 8667856574 என்ற எண்ணிற்கு வந்த அழைப்புகளையும் அந்த எண்ணிலிருந்து சென்ற அழைப்புகளையும் கால நேரத்தையும் கால அளவு மற்றும் அந்தந்த எண்களுக்குரிய நபர்களின் விலாசங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் எனது CDR Report (30 பக்கங்கள்)ல் தந்துள்ளேன். 29.01.2024 ம் தேதி காலை 9.41 லிருந்து மதியம் 11.51 மணி வரை இழுப்பையூர் அம்மன்பட்டி மெயின்ரோடு உடைய சேர்வைக்காரன் பட்டியில் உள்ள எங்கள் Reliance Jio டவரில் இருந்துள்ளது. 11.51 மணி

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.11.28 12:57:37 +0530

நேரத்திற்கு பிறகு 12.05 மணியளவில் மேற்படி எண்ணுக்கு 8973762317 என்ற எண்ணிலிருந்து ஒரு அழைப்பு வந்துள்ளது. 8973762317 என்ற எண்ணுக்குரிய அழைப்பு கமுதி சத்திரிய நாடார் உறவின்முறை டிரஸ்ட், கமுதி என்ற விலாசத்தில் உள்ள எங்களுக்கு சொந்தமான Reliance Jio டவரில் இருந்து அழைப்பு வந்துள்ளது. மீண்டும் 8667856574 என்ற எண்ணுக்குரிய நபர் இழுப்பையூர் அம்மன்பட்டி மெயின்ரோடு உடைய சேர்வைக்காரன் பட்டியில் உள்ள எங்கள் Reliance Jio டவர் ரேடியஸ் பகுதிக்குள் வந்துள்ளார். மீண்டும் 8667856574 என்ற எண்ணிலிருந்து 6385322080 என்ற எண்ணிற்கு 29.01.2024 ம் தேதி மதியம் 12.07.42 மணியளவில் 110 வினாடிகள் கால அளவு கொண்ட அழைப்பு சென்றுள்ளது. அதிகபட்சமாக ஒரு கி.மீ சுற்றளவிலிருந்து மேற்சொன்ன இழுப்பையூர் அம்மன்பட்டி மெயின்ரோடு உடைய சேர்வைக்காரன் பட்டியில் உள்ள எங்கள் டவரில் பதிவாகியிருக்கும். காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தாரா என்றால் ஞாபகமில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Tmt. Vishalatchi,
Assistant Programmer,
City Civil Court,
Chennai.

Tmt. C. Malaikolunthi,
Assistant,
PCR Court,
Ramanathapuram.

Co coordinator
Remote site

Deponent

Co coordinator
Court site

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2025.11.28 12:57:44 +0530